# THE JEWEL

JULY - 2023

*Bulletin of*

# LIONS CLUB OF SIVAKASI



**Editor** : Lion Deepa Lakshmi Sudhakaran
**Address** : 641, Gnanagiri Road, Sivakasi.
**Phone** : 94875 91369
**Email** : editor.lionsclubofsivakasi@gmail.com

**Vol : 1**



**Lion K.Prabakar**
*President*
98949 95884
president@lionsclubofsivakasi.com



**Lion P.Nithyapandi**
*Secretary*
94431 69876
secretary@lionsclubofsivakasi.com



**Lion P.Sudhakaran**
*Treasurer*
94433 31369
treasurer@lionsclubofsivakasi.com

---

**Associate Editors 2023 - 24**



**Lion**
**MJF P.Vinoth Kanna**



**Lion**
**M.Raddhikadevi**



**Lion**
**S.Bhavani**



**Lion**
**Amirtha Priya**

---



*"You can't get very far until you start doing something for somebody else"*

*- Melvin Jones*

# Lions Club of Sivakasi Surpassing
# 62nd Year 1961 - 2023



| | | |
|---|---|---|
| Multiple District | : | **324** |
| District | : | **324 A** |
| Region | : | **Raja Rajan** |
| Zone | : | **Vilvam** |
| Club No | : | **26504** |
| Inaugurated on | : | **09-05-1961** |
| Charterd on | : | **19-05-1961** |
| Total Members | : | **220** |
| Charter Member | : | **1** |
| MJFs & PMJFs | : | **28 & 3** |
| Meeting Days | : | I, II, IV Wednesday |
| Meeting Venue | : | Sivakasi Lions Junior School<br>Palaniandavarpuram Colony, Sivakasi. |
| Permanent Project | : | **The Sivakasi Lions Mat.School, Sivakasi.<br>Bus Shelters, Children's Park, Blood Separation Unit, Blood Storage D.Freezer, ICU Ward & Washing Plant at Sivakasi G.H., Library and sewing machine centre in Burma Colony.** |

# Table of Contents


- ★ President Message 4
- ★ Secretary Message 6
- ★ Treasurer Message 11
- ★ Editor Message 12
- ★ Cover Story (Our Club Milestone) 14
- ★ Lion Star 17
- ★ PST Schooling in Munnar 21
- ★ பதவி ஏற்புவிழா 22
- ★ 105th Lions International convention Highlights 28
- ★ First Regular Meeting 31
- ★ Unveiling the school activities 33
- ★ சேவைச் செம்மலும், நமது சங்கமும் 36
- ★ Service to Nature 39
- ★ காமராஜர் பிறந்த நாள் விழா 41
- ★ Upcoming events of our club 43
- ★ Personality Test 44
- ★ Miniature motivational story 45
- ★ Cherishing the moments of our members 46

# President Message



அனைவருக்கும் வணக்கங்கள். பாரம்பரிய மிக்க நமது லயன்ஸ் சங்கத்திற்கு 63வது தலைவராக பணியாற்ற எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நோபல் பரிசு பெற்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டின் அவர்களின் மேற்கோள் எடுத்துரைத்தலில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ள ஒன்று

**"If you always do what you always did, you will always get what you always got"**

அதன் பொருள் "செய்யும் வேலையை திரும்ப திரும்ப அதே மாதிரி செய்து கொண்டிருந்தால், ஏற்கனவே கிடைத்த பலன்கள் தான் கிடைக்கும் அதைவிட சிறந்த பலன்கள் கிடைக்காது."

இந்த மேற்கோளுக்கு இணங்க இந்த வருடம் எங்களது டீம் அனைவரும் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் சற்று வித்தியாசப்படுத்தி பணியாற்ற திட்டமிட்டுள்ளோம்.

டிஜிட்டல் மயமாகும் இந்த கால கட்டத்தில் நமது சங்கத்தின் பழைய செயல்பாடுகள், தற்சமயம் நடக்கும் செயல்பாடுகள் அனைத்தையும் இணையதளம் ஒன்றை உருவாக்கி அதில் பதிவேற்றம் செய்ய முடிவு செய்து அதற்கான வேலைகளை செய்து கொண்டு இருக்கிறோம்.

நமது சங்கத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல நமது சங்கத்தை போன்ற பாரம்பரிய மிக்க சங்கத்துடன் இணைந்து நமது மாவட்டத்திற்குள்ளும், நமது தமிழ் நாட்டிற்குள்ளும், நமது இந்தியாவிற்குள்ளும் மற்றும் வேற்று

நாட்டிலும் கூட்டங்கள் நடத்த திட்டமிட்டுள்ளோம். அதன்மூலம் கிடைக்கும் யோசனைகளை வைத்து வேறு திட்டங்களையும் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

தொண்டாற்றுவதில் எப்பொழுதும் முதன்மையில் இருக்கும் நமது சங்கத்தை அதே நிலையில் தொடர்ந்து நிறுத்த பல சேவைகளை செய்ய திட்டமிட்டுள்ளோம்.

நாங்கள் சிறந்த முறையில் செயல்பட்டு வெற்றிகரமாக இந்த வருடத்தை முடிக்க எங்களுக்கு அனைவரும் உறுதுணையாக இருந்து எங்களுடன் இணைந்து செயலாற்றும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**"Unity is strength... when there is team work and collaboration, wonderful things can be achieved"**

நன்றி, வணக்கம்,

**Lion K.Prabakar**
*President*



# SECRETARY REPORT

*Lion P.Nithyapandi*



அன்பு லயன்ஸ் நண்பர்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம். என்னை 2023-24ம் ஆண்டிற்கான செயலாளர் பதவிக்கு பரிந்துரை செய்த லயன் K.பிரபாகரர் அண்ணனுக்கு எனது நன்றிகள். உங்கள் அனைவரின் ஆசியுடன் இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன்.

14.06.2023 அன்று நமது கிளப்பின் வைரம் லயன் PDG A.வைரபிரகாசம் அண்ணாச்சி மற்றும் மீரா அக்கா அவர்களின் ஆசியுடன் தூத்துக்குடி லயன்ஸ் கிளப் PDG டாக்டர் லயன் P.N.கதிரேசன் MJF அவர்களால் பதவி பிரமாணம் செய்து வைத்தார்கள். அன்று நமது சங்கம் சார்பாக 195 நபர்கள் கலந்து கொண்டோம்.

நாம் பதவி ஏற்கும் முன்பே மூணாரில் நடைபெற்ற PST பயிற்சி பட்டறையில் முத்தலைவர்களும் கலந்து கொண்டோம்.

26.06.2023 அன்று லயன் PDG.A.வைரபிரகாசம் அண்ணாச்சியின் பிறந்த நாள் அன்று நமது சங்கம் சார்பாக அண்ணாச்சியிடம் ஆசி பெற்று வந்தோம்.

05.07.2023 அன்று நமது சங்கத்தின் முதலாவது செயற்குழு கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதில் 47 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

12.07.2023 அன்று நமது சங்கத்தின் முதல் பொதுக்குழு கூட்ட நடைபெற்றது. இதில் இரண்டு மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.10,000/- வழங்கப்பட்டது.

14.07.2023 அன்று நமது சிவகாசி லயன்ஸ் சீனியர் பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. நமது சங்கத்தின் சார்பாக துணைத்தலைவர் லயன் சுதீர் குத்துவிளக்கு ஏற்றி காமராஜர் படத்திற்கு மாலை அணிவித்து சிறப்புரை

ஆற்றினார்கள். விழாவில் காமராஜரின் குறும்படம் காண்பிக்கப்பட்டது. காமராஜர் பற்றிய பாடல் மற்றும் கவிதை, கட்டுரை போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த மாதம் சர்வீஸ் செய்வதற்கு கொடுத்து உதவிய நல் உள்ளங்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்

| சேவையை வழங்குபவர்கள் | சேவையை பெறுபவர்கள் | பொருள் | மதிப்பு |
|---|---|---|---|
| Ln A.P.செல்வராஜன் MJF | Sivakasi Government Hospital | **Blood Components Seperation Unit** | ரூ. 60 லட்சம் |
| Ln S.N.சிவபிரான்<br>Ln K.பிரபாகர் | முத்துமாரியப்பன் | அயர்ன் பாக்ஸ் | ரூ. 5,000 |
| Ln P. வினோத் கண்ணா MJF | மகேஸ்வரி | அயர்ன் பாக்ஸ் | ரூ. 5,000 |
| Ln N. தேவி நித்தியபாண்டி | சுமதி | தையல் மிஷின் | ரூ. 6,900 |
| Ln சாவித்ரி குருசாமி | தருண் | சைக்கிள் | ரூ. 2,000 |
| Ln S.ஸ்டாலின்<br>Ln K.பிரபாகர் | தினேஷ் பி.காம்<br>கலசலிங்கம் பல்கலைக்கழக மாணவர் | கல்வி உதவித்தொகை | ரூ. 5,000 |
| லஸ்ன்ஸ் கிளப் ஆப் சிவகாசி ஆபீஸ் பேரர்ஸ் 2023 - 2024 | வள்ளலார் இல்லம் | அரிசி, பலசரக்கு சாமான் | ரூ. 6,000<br>1 நாள் |
| Ln P.சுதாகரன் | ஆனந்தஜோதி மகேஸ்வரி | பள்ளி சீருடை | ரூ. 2,500 |
| Ln M.ரவிக்குமரன் | நித்திய பாண்டி | மரக்கன்றுகள் | ரூ. 3,000 |
| Ln V.I.D.அமலானந்த் | வள்ளலார் இல்லம் | அரிசி, பலசரக்கு சாமான் | ரூ. 15,000 |
| Ln V.I.D.அமலானந்த் | ஜீவக்கல் முதியோர்இல்லம் | அரிசி, பலசரக்கு சாமான் | ரூ. 56,628 |
| Ln P.சுதாகரன் | பாட்டி முதியவர் | பலசரக்கு சாமான்<br>1 மாதத்திற்கு தேவையான | ரூ. 1090 |
| லஸ்ன்ஸ் கிளப் ஆப் சிவகாசி | பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சிவகாசி வட்டாரம்<br>**Mr. Sheik Mohammed**<br>Health Inspector Sivakasi Corporation | 150 பேனர்கள் | ரூ. 7,500 |

| சேவையை வழங்குபவர்கள் | சேவையை பெறுபவர்கள் | பொருள் | மதிப்பு |
|---|---|---|---|
| Ln S. சுதிர் | நித்திய பாண்டி | திணை மூடை 50 கிலோ | ரூ. 2,450 |
| 26-06-2023<br>Ln J.ரமேஷ்குமார் குடும்பத்தினர் | எல்வின் சென்டர் | மதிய உணவு வழங்கப்பட்டது | ரூ. 35,000 |
| 30-06-2023<br>Ln அமலாணந்த் குடும்பத்தினர் | ஜீவக்கல் தொண்டு நிறுவனம் | 140 பேர்களுக்கு கண்பரிசோதனை | மனித நேயத் தொண்டு |
| 05-07-2023<br>Ln T. இம்பாலா | ஜீவக்கல் தொண்டு நிறுவனம் | 4 கண் கண்ணாடி | ரூ. 1,000 |
| Ln P. நித்தியபாண்டி | | கண் அறுவை சிகிச்சைக்கு | ரூ. 2,500 |
| Ln பால்ராஜ் | | \\ | ரூ. 2,500 |
| Ln ராமர் | | \\ | ரூ. 2,500 |
| Ln ராமமூர்த்தி | | \\ | ரூ. 2,500 |
| Ln முரளிராஜ் | | \\ | ரூ. 2,500 |
| Ln வினோத்கண்ணா MJF<br>மொத்தம் 6 பேர் | | \\ | ரூ. 2,500 |
| 07-07-2023<br>Ln அமலாணந்த் | சிபியோ உண்டு உறைவிட பள்ளி | 1 மாதத்திற்கு தேவையான பலசரக்கு சாமான் | ரூ. 16,000 |
| 12-07-2023<br>Ln வாசியப்பன் மற்றும் லயன்ஸ் கிளப் சார்பாக | S.ஞானதர்ஷன் A.J.கல்லூரி B.Sc | கல்வி உதவித்தொகை | ரூ. 5,000<br>( ரூ. 3,000 - 2,000 ) |
| 12-07-2023<br>Ln முத்துக்குமரன் | அபு பக்கர் சித்திக் காளீஸ்வரி கல்லூரி B.Com., CA | கல்வி உதவித்தொகை | ரூ. 5,000 |










*We believe in making difference.*

# Humanity in Action on our Club Installation























## *Birthday Celebration of our PDG Lion A.Vairaprakasam MJF*







## *Club Installation Attended by our Club Leaders*

Lions Club of Sivakasi Cosmos
Lions Club of Sivakasi Industrial Town
Lions Club of Sivakasi Metro
Lions Club of Sivakasi Central
Lions Club of Sivakasi Golden Centennial
Lions Club of Thiruthangal
Lions Club of Sankarankovil
Lions Club of Vembakottai Passion

# பொருளாளர் செய்தி

*Lion P.Sudhakaran*



மதிப்பு மிக்க லயன்ஸ் அன்பர்களே,

நமது லயன்ஸ் சங்கம் பாரம்பரிய மிக்க ஒரு பழமையான சங்கம் மட்டுமின்றி சர்வதேச அளவில் தனக்கென நற்பெயர் பெற்று சீரும் சிறப்புமாகச் செயல்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே அப்படிப்பட்ட சிறப்புமிக்க சங்கத்தில் பொருளாளராக சேவையாற்ற எனக்கு வாய்ப்பு அளித்த நமது சங்கத்தலைவர் அவர்களுக்கும், பதவிப் பிரமாணம் செய்து வைத்த PDG Lion Dr.P.N.கதிரேசன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சங்கம் பல புதிய சேவைகள் செய்திட, நமது சங்கத்தின் சந்தா தொகை தனி நபருக்கு ரூ.10,000/-ம், ஒரு குடும்பத்திற்கு ரூ.17,000/-ம் செலுத்திட வேண்டுகிறேன். இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 31ம் தேதிக்குள் சந்தா தொகை செலுத்தும் நம் உறுப்பினர்கள் அனைவருக்கும் சிறப்பு பரிசு வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

**"ஒரு கை நீட்டி உதவி செய்தால்**
**இரு கைகள் நம்மை வணங்கும் கடவுளாக"**

*என்றும் லயன்ஸ் சேவையில்...*

**Lion.P.சுதாகரன்**
பொருளாளர்
ஈஸ்வரி பிக்சர்மார்ட், 641, ஞானகிரி ரோடு, சிவகாசி.
Cell : 94433 31369

**Lion.A.அருண்குமார்**
உதவி பொருளாளர்
4/1713-B, அம்மன் நகர், 5வது தெரு, சிவகாசி.
Cell : 98949 47587

## இதழாசிரியர் பக்கம்



அன்பு லயன்ஸ் நண்பர்களே THE JEWEL இதழின் புதிய இதழாசிரியராக உங்கள் அனைவரையும் காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நமது சங்கத்தின் இதழ் 1975 முதல் லயன்ஸ் உலகை வலம் வருகிறது.

"THE JEWEL" இது நம் சங்கத்தின் செயல்பாட்டையும், சாதனைகளையும், சேவைகளையும், முன்னிலைப்படுத்தும். மேலும் சர்வதேச லயன்ஸ் சங்கங்களில் நடக்கும் நிகழ்வுகளையும் வழங்குகிறது.

இந்த லயன்ஸ் ஆண்டின் புல்லட்டினின் அட்டை பக்கத்தில் தொடங்கி இறுதி பக்கம் வரை புதுப்பொலிவுடன் வெளி வரவுள்ளது. இதழின் அட்டையில் நமது சங்கம் செய்த நிரந்தர சேவைத் திட்டத்தின் புகைப்படமும், இதழின் உள்ளே Cover Story (Celebrating our club's milestone) என்னும் தலைப்பில் அந்த சேவைத் திட்டத்தினைப் பற்றிய முழு விளக்கமும் இடம் பெற்றிருக்கும்.

ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு சேவைத் திட்டத்தின் தொகுப்பு வெளியாவது அனைவரின் விழிகளை விரியச்செய்யும்.

ஒவ்வொரு பக்கத்தின் கீழும் நமக்கு ஊக்கமளிக்கும் வெவ்வேறு லயன்ஸ் மேற்கோள்கள் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜூன், ஜூலை மாதம் முழுவதும் அனைத்து சங்கங்களும் தனது புதிய தலைவர்களை பதவியில் அமர்த்தும் விழாவில் பரபரப்பாக இருந்தது. சர்வதேச லயன்ஸ் நிர்வாகிகள் பற்றி இந்த இதழில் காணலாம்.


*Be the difference in your community, volunteer today.*

தன் குடும்பம் எனக் குறுகிய வட்டத்தில் வாழாமல் உலகம் முழுவதையுமே தன் குடும்பம் போல் எண்ணி, எந்த பலனையும் எதிர்பாராமல் பொதுத்தொண்டும் செய்பவர்கள் உயர்ந்த நிலையை அடைந்து, மனநிறைவுடன் வாழ்வார்கள்.

**"Alone we can do so little**
**Together we can do so much"**

- Helen Keller

ஆம், நாமும் ஒற்றுமையுடன் நமது சங்க நிர்வாகிகளுடன் சேர்ந்து பல சேவைகள் புரிவோம் வாரீர்... இந்த இதழை வெளியிட எனக்கு உதவிய நமது உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிந்திக்க சில நொடி**

கடல் பெரியதுதான் ஆனால் சந்தோஷங்களை தருவது என்னவோ சிறு சிறு அலைகள் தான், ஆகையால் காணுவதைக்காட்டிலும் கிடைப்பதைக் கொண்டு வாழ்வதே மகிழ்ச்சியைத் தரும்.

நன்றி!

என்றும் அன்புடன்

**Lion தீபலட்சுமி சுதாகரன்**

*Keep Reading, Keep encouraging*



## CELEBRATING OUR CLUB'S MILESTONE
## COVER STORY

### EMBARKING ON A NEW JOURNEY TO SERVE OUR SOCIETY

நமது சமூகத்திற்கு கல்வி சேவை செய்திட ஒரு புதிய பயணத்தை நோக்கி நமது லயன்ஸ் சங்கம் சென்ற பாதை...



*Lion Meera Vairaprakasam*

**ஆங்கில வழிக்கல்வி :** சிவகாசி மக்களின் குழந்தைகள் ஆங்கில வழியில் கல்வி பயில ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டி இருந்தது. நமது லயன்ஸ் சங்கம் நம் சமுதாயத்திற்கு சேவை செய்யும் உணர்வோடு, சிவகாசியில் ஒரு ஆங்கில வழி பள்ளியை அதன் நிரந்தர சேவைத் திட்டமாக தொடங்க முடிவு செய்தது.

**முதல் பங்களிப்பு-பள்ளிக்கு இடம் :** 1967-68ல் நமது லயன்ஸ் சங்கத்தலைவராக லயன் K.A.A.அருணாசலம் அவர்கள் இருந்தார்கள். காரநேசன் லித்தோ ஓர்கஸ் உரிமையாளர்களான திரு.K.C.A.D.சிதம்பர நாடார், திரு.ஞானகிரி நாடார் அவர்கள் 15 சென்ட் இடத்தை பள்ளி கட்டுவதற்காக இலவசமாக கொடுத்தார்கள்.

**பள்ளி துவக்கம் :** நவம்பர் 25, 1967ல் லயன்ஸ் கவர்னர் லயன் G.K.தாமோதர ராவ் அவர்கள் நமது பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார். பின்பு ஆகஸ்ட் 26, 1968ல் திரு.P.அய்யநாடார் அவர்கள் பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்தார்கள். பள்ளியின் Correspondent-ஆக Lion Mr.ஞானகிரி கணேசன் இருந்தார்.

**மழலையர் பள்ளி :**

முதன் முதலில் பள்ளியில் சேர்ந்தவர்கள் நந்தினி, சுபாஷினி, அனுஜா, மகேஸ்வரி ஆவார்கள். இவர்களுக்கு Mrs.Chandra Gnanamani மற்றும் Mrs. Ebby Samuel ஆசிரியர்களாக இருந்தார்கள். Mrs.Saroja என்பவர் ஆயாவாக பணியாற்றினார்.

**முதலாம் ஆண்டு விழா :**

இவர்களுக்கு ஆண்டு விழா மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. அதற்கு திருமதி.திலகவதி ரவீந்திரன் அவர்கள் தலைமையேற்று சிறப்பாக நடத்தினார்.

**ஆரம்பப்பள்ளி :**

1970ல் சங்கத் தலைவராக PDG லயன் A.வைரப்பிரகாசம் பதவி வகித்த போது, பழனியாண்டவர்புரம் கால்பந்து விளையாட்டின் சங்கம் சார்பாக 1.4 ஏக்கர் நிலம் மகத்ததான முறையில் ஆரம்பப்பள்ளி கட்டுவதற்கு கொடுக்கப்பட்டது. ஏப்ரல் 6, 1970ல் பாரத ரத்னா திரு.கு.காமராஜர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**இன்னும் பல சேவைகள் அடுத்த இதழில்...**

Laying the Foundation by Lion Governor GK Damodar Rao on 25th November 1967



# Picture Vault - Cover Story



Lions Governor and members of Lions Club



Mr.P.Ayyanadar inaugurates the KG section



Lion PDG A.Vairaprakasam



Lion Gnanagiri Ganesan



Head Mistress Mrs.Ebenezer Samuel



Mrs.Shenbagam Gnanagiri



Mrs.Thilagavathy Ravindran



Cultural Programme

# LION STAR

**Project-1**

**சேவையால் இதயத்தை தொட்ட நமது சங்கத்தின் சிங்கங்கள்**



**"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**

**நயனுடை யான்கண் படின்."**

ஒப்புரவாகிய நற்பண்பு உடையவரிடம் செல்வம் சேர்ந்தால் அது ஊரின் நடுவே உள்ள பயன்மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது.

14-06-2023 உலக இரத்த கொடையாளர் தினத்தன்று, நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் லயன் A.P.செல்வராஜன் MJF அவர்கள், இரத்த கூறுகளைப் பிரிப்பதற்கான மருத்துவ உபகரணங்களை (Blood Components Separation) சிவகாசி அரசு மருத்துவமனைக்கு வழங்கினார்

ஒரு குருதிக் கொடையாளரின் உடலில் இருந்து இரத்தத்தைப் பெற்று Plasma, Platelets, WBC, RBC என அதனைப் பலவேறு கூறுகளாகப் பிரிக்கும் இயந்திரம், இதனால் ஒருவர் கொடுக்கும் இரத்தத்தில் நான்கு விதமான நோய்களைக் குணப்படுத்தலாம். இதனை தீக்காயம் ஏற்பட்டவர்களுக்கும், பிரசவம் மற்றும் ஆப்பரேஸன் காலங்களில் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டவர்களுக்கும்,

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஹீமோகுளோபின் குறைபாடு உள்ளவர்களுக்கும் பயன்படுத்தலாம். இந்த அணுக்களை 1-3 வருடம் வரை பாதுகாக்கலாம்.

இத்தனை நாட்கள் இந்த சிகிச்சை தேவைப்படுபவர்கள் விருதுநகர் மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது, ஆனால் இப்போது நமது சிவகாசி அரசு மருத்துவமனையில் இந்த சேவையைத் தொடங்கியுள்ளதால் அதிக மக்கள் பயனடைகின்றார்கள்.

இந்த சேவையைப் பற்றிய விபரங்களைக் கொடுத்த நமது சங்கத்தின் உறுப்பினர் லயன் **Dr.அய்யனார்** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தன்னலமற்ற சேவையை செய்த நமது சங்கத்தின் **முன்னாள் தலைவர் லயன். A.P.செல்வராஜன்** MJF அவர்களை நாம் அனைவரும் பாராட்டுவோம்.

அறிவியலால் உருவாக்க முடியாத வியப்பூட்டும் திரவம் தான் இரத்தம். உடலோடு கலந்து உறுப்புகளுக்கு கொடுக்கும் அது உயிர் எனும் முத்தம்.

**"உயிர் காப்போம் உதிரம் தந்து"**



**Project-2**



**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

உடல் உணவால் அமைவது, உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவார்.

26-06-2023 அன்று நமது லயன்ஸ் பள்ளியின் Correspondent, Lion.J.ரமேஷ் குமார் B.E., அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து, சிவகாசி சாட்சியாபுரம் எல்வின் சென்டரில் உள்ள 250 காதுகேளாதோர், வாய் பேச முடியாதோர் மற்றும் மனநலம் குன்றிய குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கி சிறப்பித்தார். இயலாதவர்களுக்கும், வாய்ப்பு அற்றவர்களுக்கும் சேரட்டும் இவரது சேவை.





**Project-3**



**"மனிதனுக்கு செய்யும் சேவையே மகேசன் சேவை"**

14.06.2023 அன்று லயன் அமலானந்த அவர்கள் வள்ளளார் இல்லம் மற்றும் ஜீவக்கல் முதியோர் இல்லத்திற்கு, தேவையான ஒரு மாத அரிசி மற்றும் பலசரக்கு சாமான்களை வழங்கினார். மேலும் அந்த முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு, நவீன் கண் மருத்துவனை நிர்வாகம் சார்பாக கண்பரிசோதனை முகாமை நடத்தினார். இதன் மூலம் 140 பயனாளிகள் பயனடைந்தார்கள்.

முதியோர்களின் மேகமூட்டமான நாட்களின் சூரிய ஒளியாய் விளங்குகிறார். மேலும் சிவகாசியில் உள்ள அரசு மருத்துவமனையில் உள்ள நோயாளிகள் பயன்பெறும் வகையில் தினமும் 2000 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பல வருடங்களாக வழங்குகிறார். இவரின் உன்னதமான சேவையை அனைவரும் பாராட்டுவோம்.



# PST Schooling at Munnar

**Lion P.Nithya Pandi**



அன்பு லயன்ஸ் அனைவருக்கும் வணக்கம்.

அன்பிலும் சேவையிலும் முதலிடம் பெற்ற லயன்ஸ் இயக்கத்தின் முத்தலைவர்களின் பயிற்சி பட்டறை கடந்த ஜூன் மாதம் 10, 11 ஆகிய இரண்டு நாட்கள் மூணாறில் உள்ள Silver Tips ஹோட்டலில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. இதில் முத்தலைவர்களும் கலந்து கொண்டோம்.

10-06-2023 அன்று 324 A, மாவட்டத்திலிருந்து 150 சங்கங்களும், 550 உறுப்பினர்களும் கலந்து கொண்டோம். இதில் நமது சங்கத்தின் சார்பாக லயன். S.N.N.சிவபிரான் அவர்கள், முத்தலைவர்களின் பணியையும், பொறுப்பையும் பற்றி சிறப்பாக உரையாற்றினார்.

11-06-2023 அன்று தலைவர், செயலாளர், பொருளாளர், அட்மின் அவர்களுக்கு தனித்தனியாக பயிற்சி பட்டறை நடைபெற்றது. மதிய விருந்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.





# பதவியேற்பு விழா

**Lion விசாலாட்சி பாஸ்கரன்**



2023-24 லயன்ஸ் ஆண்டிற்கான புதிய சங்க நிர்வாகிகள் பொறுப்பேற்கும் நிகழ்வு 14.06.2023 அன்று மாலை 7.00 மணியளவில் நமது லயன்ஸ் பள்ளியில் Lion A.வைரபிரகாசம் MJF - மீரா வைரபிரகாசம் MJF அவர்களின் ஆசீர்வாதத்தில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் மேடைக்கு அழைக்கப்பட்டனர். பதவியேற்பு விழாவினை செயல்படுத்த வந்திருந்த முதன்மை விருந்தினர் PDG.Lion Dr.P.N.கதிரேசன் MJF அவர்களை Lion கிருஷ்ணமூர்த்தி MJF அவர்கள் மேடைக்கு அழைத்து வந்தார். கொடி வணக்கத்தை Lion விசாலாட்சி, லயன்ஸ் பிரார்த்தனையை Lion கருணைமணியும் வாசித்தனர். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

லயன்ஸ் பள்ளியில் 10, 11 மற்றும் 12ம் வகுப்புகளில் பயின்று நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு PDG Lion Dr.P.N.கதிரேசன் MJF அவர்கள் நமது சங்கம் சார்பாக விருதுகளை வழங்கி பாராட்டினார்கள்.

**முதன்மை விருந்தினர் :**

1992-93ம் ஆண்டு மாவட்ட ஆளுநர், இன்றைய முதன்மை விருந்தினர் PDG Lion Dr.P.N.கதிரேசன் MJF அவர்களை Lion M.ராமமூர்த்தி அவர்கள் சங்க உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். நமது சிறப்பு விருந்தினர் திறன்மிகு Endoscopy மருத்துவராகவும், சீர்மிகு லயன் ஆளுநராகவும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரது ஆளுநர் ஆண்டுகளில் ஏறத்தாழ 10 புதிய சங்கங்களை தோற்றுவித்ததாகவும் மேலும் Lion SKC.அருணாசலம் மற்றும் Lion P.O.P.ராமசாமி ஆகிய இரு ஆளுநர்களை உருவாக்கியதாகவும் புகழ்ந்தார்.

நண்பர்களை நேசிப்பதும், புத்தகங்களை வாசிப்பதும் தனக்கு சுவாசிப்பது போன்றது என கூறி தன் உரையை தொடங்கினார் முன்னாள் ஆளுநர் எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வம், அழகை ரசிக்கும் தன்மை, நட்பை வளர்த்துக் கொள்வது, பிறருக்காக விட்டுக் கொடுப்பது வாழ்க்கைக்கு அவசியம் என்றார்.

லயன்ஸ் சங்கம் சிறப்பாக செயல்பட எந்தவொரு செயலையும் இணைந்து, சிந்தித்து, விவாதித்து கடமை உணர்வோடு அனைவரும் பணியாற்றுவது அவசியம் என்பதை வலியுறுத்தினார். பதவியேற்பு விழாவினை நடத்திட தனக்கு கிடைத்த நல்ல வாய்ப்பிற்காக மிகவும் மகிழ்ந்து தம் பணியினை செவ்வனே செய்தார். 2023-24ஆம் ஆண்டிற்கான நிர்வாகிகள் அனைவரும் பதவியேற்றனர்.

ஒவ்வொரு நிர்வாகியையும் அழைத்து, சங்கத்தில் அவருக்குரிய பொறுப்புகளை கோடிட்டுக் காட்டினார். பன்னாட்டு லயன்ஸ் சங்க முறைப்படி அந்தந்த பதவியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை பதவியில் அமர்த்தினார். புதிய தலைவர் லயன் K.பிரபாகர் அவர்களிடம் நமது சங்கத்தின் அதிகாரச் சின்னமான நமது Gong and Gavel-ஐ PDG வழங்கினார்.

**தலைவரின் ஏற்புரை :**

சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் 63வது தலைவராக பொறுப்பேற்ற Lion K.பிரபாகர் அவர்கள் தன்னுடைய ஏற்புரையில் இச்சங்கத்தில் 2008-09ல் பொருளாளராகவும், 2010-11ல் செயலாளராகவும் மற்றும் 2015-19ம் ஆண்டு லயன்ஸ் பள்ளியில் 18வது தாளாளராகவும் செயலாற்றிட அவருக்கு கிடைத்த நல்ல வாய்ப்புகளை நினைவு கூர்ந்தார். பொறுப்புகள் அவரது தலைமைப்பண்பு, பேச்சுத்திறமை, நேரந்தவறாமை, நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தியதாக கூறினார்.

PDG Lion A.வைரப்பிரகாசம் அவர்களிடம் இருந்து கற்றுக் கொண்ட பண்புகள் அவரை மென்மேலும் மெருகேற்றிதாகவும் மேலும் வைர அண்ணாச்சியின் மனிதநேய மாண்பு அவரை

வியப்படைய செய்ததாகவும் கூறினார். மேலும் நமது சங்கத்தின் தனிப்பெரும் சிறப்பே மூன்று தலைமுறையை சார்ந்த உறுப்பினர்கள் ஒன்றுபட்டு செயல்படுவதுதான் நமது சங்கத்திற்கு பெருமை சேர்ப்பது ஆகும். நம் சங்கம் இந்த ஆண்டு சிறப்பாக செயல்பட எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் கூட்டு முயற்சி தேவை என்றார்.

சங்கம் செய்து கொண்டிருக்கும் தன்னிகரில்லா, ஈடு இணையற்ற சமுதாய சேவைகளை மென்மேலும் சிறப்பாகவும், திறம்படவும் தொடர அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தர கேட்டுக் கொண்டார்.

**வாழ்த்துரை:**

Zone Chairperson Lion D.பிரபாகரன் PMJF அவர்கள், தலைவர் Lion K.பிரபாகர் அவர்களின் ஏற்புரையை பாராட்டி பணி சிறக்க வாழ்த்தினார். மேலும் 2023-24ஆம் ஆண்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள RC Lion.K.நாகராஜன், ZC Lion.M.ஸ்டீபன் மற்றும் DC Lion R.V.முனீஸ்வரன் அவர்களும் சிறப்பான சேவைகள் பல புரிந்திட தங்களின் நல்வாழ்த்துக்களை நல்கினார்.

**சேவைகள்:**

சமுதாய முன்னேற்றத்திற்கு அடிப்படை மனிதநேயம். மனித நேய வெளிப்பாடே சேவை. 14.06.2023 அன்று நம் சங்கத்தால் ரூபாய் 61,18,068/- மதிப்புள்ள 14 சேவைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதன்மை விருந்தினர் மற்றும் விழாவிற்கு வருகை தந்த பிற சங்க உறுப்பினர்களுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டது.

விழாவினை Lion முருகையன் அவர்களும், Lion ராதிகா முருகையன் அவர்களும் சிறந்த முறையில் தொகுத்து வழங்கினார்கள். செயலாளர் Lion நித்யபாண்டி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# Visual Journey - Our Club Installation



















# Visual Journey - Our Club Installation
























# Visual Journey - Our Club Installation





















## 105th Lions International Convention Highlights

*MJF Lion P.Vinoth Kanna*



As Lions, our actions and service inspires others. We provide courage and a unique sense of empowerment to our communities and to the world. To do this, we depend on great Leadership.

We have a new International President and she's ready to change the world with you. While each International President brings their unique passion and perspective to Lions Clubs International there has a single constant that unites all Lions Servicce.

**Our International President Lion Dr.Patti Hill**

A member of the Edmonton Host Lions Club since 1990, Dr.Hill has served on many committees and held many offices within the association, including District Chairperson for Membership, Environment, Convention and International Co-operation and Understanding. Also she's a founding member of the Lions of Canada consultative committee. She will also over see the launch of **"MISSION 1.5",** a global membership growth initiative designed to empower local clubs to



welcome new Lions and Leos in our mission of serving a world in need. President Hill's theme for the year is "Changing the World", which reminds us that every act of service, no matter how small, brings us one step closer to making the world a better place.

Lions International honours **Chef Andres** for his impactful work with the 2023 **Lion Humaniterian Award** with grant US $ 2,50,000/- during the 105th Lions Clubs International Convention July 10, 2023. Chef Andres founded **World Central Kitchen** in 2010 to fill not only stomachs but hearts and minds. To date, **WCK** has served more than 300 million nourishing meals around the world.




- ➤ Lion Fabricio oliverra from Brazil, taking Charge as - International First Vice President
- ➤ Lion A.P.Singh from India, taking charge as - International Second Vice President
- ➤ Lion Mark.S.Lyon from USA, taking charge as - International Third Vice President
- ➤ From India Lion R.Mathanagopal taking incharge as - Dist 324 - 2nd year International Director
- ➤ From India Lion Jitendra Kumar Singh Chauhan taking incharge as - 2nd year International Director.

➤ New Lead Donors for LCIF US$1,00,000 from our India.

A great act of Benovalence by PDG Lion Ramesh Babu and Lion Sulochana Mansi who have pledged to contribute 1,00,000 US$ one lakh Dollars to Lions Club International Foundation (LCIF). Hats off for their unparalleded contribution in Boston Lions convention.

We Lions Club of Sivakasi Congrats our lovable International director Lion R.Mathanagopal for receiving 5 Diamond Yellow Gold Pin from our Lion International President on Lions International convention. Lions are ready whenever and however our communities need us, and your guidance as leaders helps make our impact even greater.





# First General Body Meeting

*Lion Sharmeli Ravindran*



The first General Body Meeting for the month of July was organized on 12.07.2023 at our Lions Junior Campus by 7.10 P.M. It was a pleasant evening with Vegetable Soup as welcome drink.

As per the agenda, the first programme Tail Twister was conducted by Lion.Renuga Devi Muthukumaran. All the Lions participated in the game enthusiastically with fun and laughter.

Next our new President Lion.K.Prabakar called the meeting to order, flag salutation was done by Lion.Sharmeli Ravindran. Lions Prayer was read by Lion T.S.Vivekanathan. One minute silence for "World Peace" was observed by all the members.

Our President welcomed the gathering, Minutes of the Board meeting held on 05.07.2023 was read by our Secretary. Secretarial fortnightly report was submitted by Lion Nithya Pandi. Then Annual Budget report was read by our Treasurer Lion P.Sudhakaran.

Our general body approved the Club Committes, the Annual Program and Annual Budget for the year 2023-24. Then President narrated the feedbacks received from the members. He also put forward District projects, the Inter club meeting details to be conducted in the upcoming year and about the progress in the club website

Educational aid worth Rs.5,000/- was given to two

college students from Sri Kaliswari College, Sivakasi. Birthday and Wedding Anniversary wishes were bestowed by Lion Deepa Arunkumar. Tail Twister winners were awarded by Lion Renuga Devi. Early Bird Award was sponsored by Lion. Muraliraj and Lion Amirtha Muraliraj. Vote of thanks was proposed by our Treasurer Lion P.Sudhakaran and the meeting came to an end with National Anthem and the meeting was adjourned.











# Unveiling Lions School Activities



**Academics**

➤ Class XII Board Exam result was declared on 08.05.2023. A Durga got first mark with 596/600. SVaijeyanthi Subhitsha got second mark with 594/600, M Ramanathan & B Muthuvel got third mark with 588/600. There were 38 centums in varied subjects scored by our students.

➤ Class X & XI Board Exam result were declared on 19.05.2023. In Class X, N Divya Tharshini got first mark with 493/500. D Nandhana, A Sahana Athe Sree and A Sanjana Sri got second mark with 490/500,J Vivisha got third mark with 489/500. There were 15 centums scored by our students in varied subjects. In Class XI, P Abi Nandhini got first mark with 588/ 600. V T Vijayananthapandiayar got second mark with 585/600,N Harshitha got third mark with 584/600. There were 12 centums scored by our students in varied subjects.

**Sports Achievements**

➤ Santhosh M of Std V, won the III place in U - 10(B) category in the District Level 9th International Day of Yoga Competition on 21st June as held at VNRT Gurusamy Nadar - Rajammal Multipurpose Gymnasiums Hall organized by Virudhunagar Hindu Nadars' Senthikumara Nadar College.

➤ Praiyutha Ragshri R of Std IV won the II place in Doubles U - 11(G) category in the Virudhunagar District Level Badminton Championship held at Sivakasi organized by Anso Sports Academy.

- In the Athletic meet organized by School Education Department at Virudhunagar on 24th June 2023, V Rahul of Std XII got I Place in State Level and won a cash award of Rs.2000/-. R Kishore of Std IX got III place in Badminton.
- In the 4th Indian Abacus National Level Abacus Olympiad 2023 was conducted at Chennai on 24th June 2023. J Mukesh Raja, K R Siva Karthick Pabanasam of Std VI and K R Siva Dharshini of Std X got National Level 4th place.
- In the District level Badminton tournament on Sunday, 25th June 2023 at Sivakasi. S. Kiruthick Sagar of Class VII was the winner U- 13 mixed doubles. P.Hirthick Manikkam of class IX was the Semifinalist U-15 (S), winner U-15 mixed doubles. D Prajeeth Nagarajan was the winner U-15 (S), winner U-15 (D) Runner U-17 (S).
- Dheena Ratchagan R of Std IV and Ineyan S of Std III respectively won the II and III prize in U-9(B) category in the District Level Archery Championship on 25th June 2023 held at Arasan Junior School (CBSE), Sivakasi organised by Archery Sports Foundation, Sivakasi.
- Sri M Ponnusamy Memorial & Sivakasi Sports Club, District Level Carrom Tournament held in Jaycees Matric Hr Sec School, Sivakasi on 12th & 13th July 2023 Swathika P and Akshanaa T of Std IV won the II and III Prize respectively. Our School received " Runner Up Trophy"

**Achievements in Extracurricular Activities**

- In district level Quiz competition organised by KVS School, Virudhunagar on 13.07.2023, R Aniruth, J Manish Rathnam of Std XII got 3rd place.

- In the CROSA-2023 competition was organised by Holy Cross Old Students Association at Tuticorin. we received the Enthusiastic School Shield. Rishee Nandhanan of Std VI got 1st place in Cross word, B Ramya of Std IX got 1st place in Painting, F Amal Bellarmin Francis of Std VIII got 2nd place in Young Scientist (Junior), GM Vayuna, VA Tanishkaa, G Kowshika of Std VIII got 1st place in Bharathanatyam, SMB Jeyshree of Std XI got 2nd place in Declamation (English).
- In the KAMFEST - 2023 competition was organised by Kamarajar Matriculation Hr Sec School, Sivakasi on 15.07.2023, R Mithrayini, P Kristina Gracelyn, R Lithanya, Sheryl Christna of Std VI got 2nd place in Folk dance, M Vivek Bose of Std X got 3rd place in Essay writing, MAM Hariprakatheesh of Std VIII got 2nd place in Action king, J Kabhil Ahamed, S Jegasirpi, P Mohana Gurubaran, J Dharun Anjay of Std VIII got 2nd place in Folk dance, M Srutiga Parameswari of Std XI got 1st place in Singing, B Shree Shalini, R Nivetha of Std XI got 2nd place in Folk dance, R Prajit Ram of Std XII got 1st place in free throw, A S Priya Harini of Std VIII, M K Deekshaya Sri of Std X, D Nandhana of Std XI got 3rd place in Dumb Charade.
- M Neelambigai got special prize for Speech Contest about Kamarajar organised by Kamarajar Vasagasalai, Sivakasi on 15.07.2023.

**Mr.M.G.PANDIAN** *M.A., M.Ed., M.Phil.,*
*Principal,*
*The Sivakasi Lions Mat.Hr.Sec.School.*

## கல்விக் கண் திறந்த சேவைச் செம்மலைத் தொடரும் நமது சங்கம்



அன்பு அரிமா நண்பர்களே,

அனைவருக்கும் இனிய கல்வி வளர்ச்சி தின நல்வாழ்த்துக்கள். தொண்டாலும் தோழமையாலும் இணைந்துள்ள அரிமா நண்பர்களுடன் சாதனைச் செயல்களாலும் தொலை நோக்குச் சிந்தையினாலும் புதுமையான அனுகுமுறையாலும் கர்மவீரராக வார்ந்த கருப்பு காந்தி என்று பாரத கண்டமே கொண்டாடிய பெருந்தலைவர் கு.காமராசரின் வாழ்க்கை சுவடுகளிலிருந்து சில சிந்தனைகள். 2006 முதல் காமராசர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கண்ணுடையோர் என்போர் கற்றோர்

கல்லாதோர் என்போர் முகத்திரண்டு புண்ணுடையோர்

என்னும் திருவள்ளுவரின் கூற்றுக்கேற்ப குழந்தைகளுக்கு



கல்விக் கண் கொடுத்து வாழ்வில் ஒளியேற்றியவர் காமராசர். அவரின் ஆட்சிக் காலத்தில் தொடக்கப் பள்ளிகள் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் எண்ணிக்கை மும்மடங்கு அதிகரித்தது. உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கையும் 3 லட்சத்திலிருந்து 13 லட்சமாக உயர்ந்தது, அவரின் அடிப்படை கல்விப் பணியாகும். மேலும்.

ஏழை மாணவ மாணவியர்கள் உயர் கல்வி பெரும்பொருட்டு சென்னை ஐ.ஐ.டி., மருத்துவம். பொறியியல். ஆசிரியர் பயிற்சி. திரைப்படம், கால்நடை மருத்துவம் என பலவகையான கல்லூரிகள் துவங்கியவர்.

திண்ணைப்பள்ளியில் குறுகிய காலமே பயின்ற காமராசர் வசதிபடைத்தவர்கள், வசதியற்றவர்களுக்குக் கொடுத்து வந்த இலவச கல்விமுறையை அன்றே கருத்தில் கொண்டு முதல்வரானதும் அரசு நிதி மற்றும் நண்பர்களிடம் நிதி பெற்று கல்விச் சேவைகள் பல ஆற்றியவர்.

"தனியொருவருக்கு உணவில்லை எனில் இந்த செகத்தினை அழிப்போம்" என்ற பாரதி பிறந்த மண்ணில் மதிய உணவுத் திட்டத்தை துவங்கியவர் பெருந்தலைவர் வயிற்றுக்கு உணவிட்டு பின் செவிக்கு உணவிட்ட உத்தமன். இவ்வாறே நம் லயன்ஸ் சங்கங்கமும் "பசிக்கு உணவு" மற்றும் "கல்விச் சேவைகள்" என தொடர்ந்து சமுதாயத் தொண்டாற்றுகிறது. ஏப்ரல் 6, 1970ல் திரு.கு.காமராஜர் அவர்கள் நமது ஆரம்பப் பள்ளி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

பல்வேறு அரசுத் திட்டங்களின் விளம்பரத்திற்கான செலவை கவனித்த பெருந்தலைவர் விளம்பர செலவை நிறுத்துங்கள் அப்பணத்தில் புதிதாக பள்ளிக் கூடங்களைக் கட்டலாம் என்று பல பள்ளிகளைத் துவங்கினார். அரிமாக்களாகிய நாமும் இன்று வரை நம் The Jewel இதழின் விளம்பரத் தொகையை சிக்கனமாக செலவு செய்து அப்பணத்தை நம் அரிமாப் பள்ளிக்காக சேவைகள் பல புரிந்துள்ளோம்.

கட்சி மற்றும் பல காரணங்களுக்காக மாநாடுகள் நடத்தி அதிலிருந்து பெற்ற நிதிகளைக் கொண்டு நிறைய பள்ளிக்கூட கட்டிடங்கள் மற்றும் அவற்றின் பராமரிப்புகளைச் செய்தவர் காமராசர். அவர் வழியில் நாமும் லயன்ஸ் மண்டல மாநாடுகள் நடத்தி அதில் திரட்டிய தொகையை நம் பள்ளி

வளர்ச்சிக்கு பயன் படுத்தியுள்ளோம். குழந்தைகள் கல்விக்காக நம் காமராசர் அன்று பணமாகவும் விளைபொருட்களாகவும் உதவிகள் பல பெற்றுக்கொடுத்தார். நம் லயன்ஸ் நண்பர்கள் இன்று கல்வி உதவித் தொகை மட்டுமல்லாது சீருடைகள். புத்தகங்கள். எழுது பொருட்கள் என பலவிதங்களில் சேவைகள் பல புரிவதும் தன்னலமற்ற சேவையே.

1956ல் காமராசரால் தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டு 1957-58 வரவு செலவு அறிக்கை தமிழில் சமர்பிக்கப்பட்டது. நம் லயன்ஸ் சங்க கூட்டங்களும் இன்றும் தமிழிலேயே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க ஒன்று.

குழந்தைகள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற காமராசரின் உயர்ந்த கொள்கையின் அடிப்படையில் இன்று சில தனியார் பள்ளிகளிலும் ஏழை குழந்தைகளுக்கு இலவச கல்வி மற்றும் கல்வி உதவித் தொகை வழங்குகிறது என்றால் அங்கும் ஓர் அரிமா இருக்கிறார். பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகள் வாழ்வின் உச்சத்தை அடைந்து தனது அடையாளத்தின் வழியாக தேவை உள்ளோருக்கு வழங்குகிறார்கள் என்றால் அவர்கள் காமராசர் வழி நிற்பவர்களே.

இன்றைய காலகட்டத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியின்படி இணைய வழிக்கல்வி. இலவச வகுப்புகள், இலவச புத்தகங்கள், எப்போதும் கற்றல் என கல்வித் துறையில் மறுமலர்ச்சிகள் பல ஏற்பட்டுள்ள போதும் கணிணிகள். கற்றல் கருவிகள், எழுது பொருள்கள் வர்ழங்குதல். இணையவழி தகவல் களஞ்சியங்கள். பகிர்ந்தளித்தல் யாவையும் இப்புது யுக கல்விச் சேவைகளே.

...அன்புடன் லயன் அ.ஆ.மகேசன்

# Service to Nature

## July 3 - World No Plastic Day

*Lion Radika Devi Murugaian*



இறைவன் முதலில் இயற்கையைப் படைத்தார். அழகிய வானம், மலைகள், நதி, கடல், பச்சை மரங்கள் அத்தனையும் அவன் படைப்பு. பின்பு மனிதனையும் படைத்தார். அந்த மனிதனே அவர் படைத்த இயற்கையை அழிப்பான் என்று அவர் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்.

காடுகளை அழிக்கிறோம். காற்றை மாசு படுத்துகிறோம். நீர் நிலைகளை அசுத்தப்படுத்துகிறோம்... இன்னும் என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையையும் செய்கிறோம்.




எல்லாவற்றிற்கும் மேலாக பிளாஸ்டிக் பயன்படுத்துகின்றோம். பின்பு அதனை தூக்கி வீசுகின்றோம். அதனை கால்நடைகள் உணவாக எண்ணி சாப்பிடுகின்றன. வாய்க்கால்கள் அடைபடுகின்றன. மண்வளம் பாதிக்கப்படுகின்றது. உலகம் குப்பை மேடு ஆகின்றது... ஆனால் மனிதர்களுக்கு I Don't Care Policy.

எனக்கென்ன என்ற எண்ணத்துடன் 500 வருடங்கள் வரை மக்காமல் இருக்கும் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகித்து எறிந்து கொண்டே இருந்தால் நமது சொர்க்க பூமி நரக பூமி ஆவது நிச்சயம்.

Service to humanity is service to God... மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது பழமொழி. மக்களுக்கு

நாம் செய்யும் சேவை மிகவும் சிறப்பானது. இதில் சந்தேகமே இல்லை. அதனை நமது லயன்ஸ் சங்கங்கள் செய்து கொண்டே இருக்க வேண்டும். ஆனால் புதிதாக ஒன்றையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

Service to NATURE is service to GOD இது புதுமொழி! இயற்கைக்கு நாம் செய்யும் சேவை அதனைப் படைத்த இறைவனுக்கு நாம் செய்யும் சேவை. அதற்கு நாம் என்ன செய்யலாம்? முதலில் செய்ய வேண்டியது Say No to Plastic. பிளாஸ்டிக் என்னும் அரக்கன் பிடியிலிருந்து இயற்கையைக் காப்பாற்றுவோம்.

Single use bags, Cups, bottles ஆகியவற்றைத் தவிர்ப்போம். தவிர்க்க முடியாத பிளாஸ்டிக் பொருட்களை உபயோகித்து விட்டு தூர எறியாமல் Recycle செய்வதற்கு வழி வகுப்போம் கடைக்குச் செல்லும் போது கையில் ஒரு துணிப்பை எடுத்துச் செல்வோம்.

We, the members of Lions Club are responsible human beings Let's add the new saying.

"Service to nature is service to God' to our best we spread awareness wherever and whenever possible.



## பெருந்தலைவர் பாரத ரத்னா காமராஜர் 121வது பிறந்த நாள் விழா

*Lion P.Sudhakaran*



பெருந்தலைவர் பாரத ரத்னா காமராஜரின் 121வது பிறந்த நாள் விழா நமது லயன்ஸ் பள்ளியில் 14.07.2023 அன்று சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதாக ஆரம்பமானது. பள்ளி மாணவர் தலைவர் செல்வன் V.T.விஜயானந்தபாண்டியர் வரவேற்புரை வழங்கினார். நமது சங்கத்தின் முதலாம் துணைத்தலைவர் லயன் S.சுதிர் மற்றும் பள்ளி முதல்வர் திரு.M.G.பாண்டியன் குத்து விளக்கு ஏற்றினார்கள்.

செல்வன் P.சஞ்ஜித் மற்றும் செல்வன் M.விவேக்போஸ் காமராஜரைப் பற்றி சிறப்புரை ஆற்றினார்கள்.

தன்னலமில்லாதவர் காமராசர்... எனக் குழுவாக மாணவர்கள் பாடலைப் பாடினார்கள். செல்வன் S.விக்னேஷ்குமார் காமராசரைப் பற்றி ஒரு கவிதை வாசித்தார்.

காமராசரின் வாழ்க்கை வரலாறு பற்றி ஒரு காணொளி காண்பிக்கப்பட்டது. நமது துணைத்தலைவர் லயன் S.சுதிர் அவர்கள் காமராசரின் அரசியல் வாழ்க்கை மற்றும் சேவைத் திட்டத்தைப் பற்றி சிறப்புரை வழங்கினார்.

விழாவினை பள்ளி நிர்வாகத்தினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் விழாவில் Lion P.நித்தியபாண்டி, Lion P.சுதாகரன், Lion K.முரளிராஜ், Lion A.அருண்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு, நமது சங்கத்தின் சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டது. அனைவரும் தேசிய கீதம் பாட விழா இனிதே நிறைவு பெற்றது.

# Visual Journey - Kamarajar Birthday Celebration























*We serve in unity.*

# UPCOMING EVENTS

July 30$^{th}$ - 34$^{th}$ District Cabinet Installation at Kovilpatti.

Aug 2$^{nd}$ - Second Board Meeting.

Aug 9$^{th}$ - First regular Meeting

Aug 13$^{th}$ - Interclub meeting with Lions Club of Tuticorin


Aug 15$^{th}$ - Independence Day Celebration

Aug 23$^{rd}$ - Second regular meeting

---

**Inter Club Meeting with Lions Club of Tuticorin :**


It is the first club started in our District 324-A. We have planned for inter club meeting with this esteemed club on Aug 13$^{th}$. This club was chartered on 26.08.1959 and inaugurated on 22.02.1959 with total of 108 members, with PDG Lion Dr.P.N.Kathiresan MJF. It's a great opportunity for us to interact with this club, so those who are willing to join contact - Secretary - P. Nithya Pandi - 94431 69876 and Joint Secretary - K. Muraliraj - 92446 04050. Please do block this date and join for the inter club meeting.



# Personality Test

## *The First Four Words Describe you*

Sometimes we need a break from the serious stuff. Perhaps you've seen the picture below before. When I first saw it I found it an interesting little item and thought you all might enjoy this fun diversion in your day. So take a look at the picture. The first four words describe you.




.................................... ....................................

.................................... ....................................

*Answer in Page 47*

.................................... ....................................

# Miniature Motivational Story

## எது சொர்க்கம் - எது நரகம்

சீடன் ஒருவன் தன் குருவிடம் கேட்கிறான் குருவே சொர்க்கம் என்றால் என்ன..? நரகம் என்றால் என்ன? என்று. உடனே குரு தன் சீடனை ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

பார்த்தாயா, இந்த இடம் தான் நரகம் என்று காண்பித்தார். அந்த இடத்தைப் பார்த்தால் எல்லோரும் அங்கு அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னாடி ஒரு பானை நிறைய சர்க்கரைப் பொங்கல் இருந்தது. அதைப் பார்த்த அந்த சீடன் கேட்கிறான் "குருவே இதுவா நரகம், இங்கு அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல் அல்லவா பரிமாறியிருக்கிறார்கள்.

அப்போது அந்த குரு சொன்னார். அவர்கள் முன்னாடி சர்க்கரைப் பொங்கல் உள்ளது, ஆனால் அவர்களுடைய கைகள் மடக்க முடியாமல் ஒரு நீள குச்சியால் கைவிரல் முதல் தோள்பட்டை வரை கட்டப்பட்டு இருக்கின்றது. அவர்களும் கைகளை அப்படியே வைத்திருக்கிறார்கள். அவர்கள் முன்னாடி இருந்த சர்க்கரைப் பொங்கலும் அவர்களால் சாப்பிட முடியாமல் அப்படியே இருந்தது.

சரி, அப்போ சொர்க்கம் எப்படி இருக்கின்றது என்று பார்க்கச் செல்கிறார்கள். அங்கேயும் இதே போன்று பானை நிறைய சர்க்கரைப் பொங்கல் இருக்கின்றது, அங்கிருந்த மனிதர்களின் கைகளும் மடக்க முடியாமல் ஒரு நீள குச்சியால் கட்டப்பட்டு இருக்கின்றது. இங்கேயும் இவர்கள் கைகள் கட்டப்பட்டு தானே இருக்கின்றது என்றான் சீடன், அப்போது குரு சொல்கிறார், "நன்றாகப் பார் அந்தப் பானைகளை நடுவில் வைத்துக் கொண்டு எதிரெதிரெ இரண்டுபேர் அமர்ந்து கொள்கிறார்கள், ஒருவர் தம் எதிரில் இருப்பவர்க்கு அந்த சர்க்கரைப்பொங்கலை எடுத்து ஊட்டுகிறார், எதிரில் இருப்பவரும் இவருக்கு ஊட்டுகிறார், இருவரும் பொங்கலை சுவைத்து சாப்பிடுகிறார்கள்.

தானும் வாழ்ந்து அடுத்தவரையும் வாழ வைப்பவர்கள் இருக்கக்கூடிய இடம் தான் சொர்க்கம். தானும் வாழாமல் அடுத்தவர்களுக்கும் பயன் அளிக்காமல் வாழ்பவர்கள் இருக்கக்கூடிய இடம் தான் நரகம் என்றார்.

# Cherishing the moments of our members

மகிழ்வான தருணங்கள் மலரட்டும் இனிமையாக...

நெகிழ்வான நேரங்கள் நிகழட்டும் இளமையாக...

எண்ணங்களும், ஏக்கங்களும் எல்லை தாண்டி வெல்லட்டும்...

கையிட்டு செய்பவைகள் கையில் வந்து சேரட்டும்...

வலிமையான வரிகளால் வாழ்த்திட தெரியவில்லை...

எனவே மனமார வாழ்த்துகின்றோம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

வாழ்க வளமுடனும் நலமுடனும்!

என்று சிவகாசி லயன் சங்கத்தின் சார்பாக

உளமார வாழ்த்துகின்றோம் ! வணங்குகின்றோம்!!



Lion K. Shankar
01.07.1969



Lion Jaya Nagarajan
01.07.1971



Lion Preetha Arun Prasanna
02.07.1985



Lion Meera Vaiaraprakasam MJF
04.07.1937



Lion A.Iyan Adhedheeran
04.07.1993



Lion S.N.N. Sivapiran
10.07.1967



Lion M. Amirtha Priya
14.07.1982



Lion V.Ayyan Kodeeswaran
15.07.1963



Lion Bhavani Sudhir
21.07.1980



Lion Niranjana Ayyan Kodeeswaran
25.07.1963



Lion C. Senthil Velavan
27.07.1967



Lion Thilageswari Raju
29.07.1979




Lion Chitra Gunasekaran
31.07.1950

**Birthday Riddle**

*7 years ago I was 7 years old 7 years later how old am I?*

**Answer : 21 Years Old**

## Answer for the Puzzle





*Connect with compassion.*

## திருமண நாள் வாழ்த்துக்கள்...

உத்திராயணப் இத்தகு சிறப்பு வாய்ந்த ஆனி மாதத்தில் திருமண நாளைக் கொண்டாடும் நம் லயன்ஸ்கள்.

| | |
|---|---|
| 1. லயன் நித்யபாண்டி - லயன் தேவி | 04.07.2004 |
| 2. லயன் சுபாசிங் இந்தியாராஜன் - லயன் ஹேமா | 05.07.1968 |
| 3. லயன் கற்பகராஜ் - லயன் அனிதா | 05.07.2000 |
| 4. லயன் சர்மிளி ரவீந்திரன் | 06.07.1997 |
| 5. லயன் முத்துக்குமார் - லயன் விஜி | 07.07.1995 |
| 6. லயன் நாகராஜன் - லயன் ஜெயா @மகேஸ்வரி | 09.07.1992 |
| 7. லயன் வாசியப்பன் - லயன் மணிமேகலை | 09.07.1992 |
| 8. லயன் சந்திரசேகரன் - லயன் லட்சுமி | 10.07.1966 |
| 9. லயன் நூர் முஹம்மது - லயன் ரீனத் ஷீபா | 13.07.1986 |
| 10. லயன் ஆனந்தராஜன் - லயன் ஹேமலதா | 15.07.1991 |

*திருமண நாளைக் கொண்டாடும் லயன் தம்பதியர்*

*கருத்தொருமித்த தம்பதியராய்*



*சுற்றம் வியக்கும் வாழ்வை காண்பீர்...*

*உதாரணத் தம்பதியராய்*

*ஊர் போற்ற, உறவும் போற்ற*

*இணை பிரியாத வாழ்வினிலே,*

*நூறாண்டு காலம் வாழ்ந்திடவே*

*சிவகாசி லயன் சங்கத்தின் சார்பாக*

*உளம் கனிந்த திருமண நாள் நல்வாழ்த்துகள்...*



**Lion Deepa Arunkumar**

**Greeter Committee Chairperson 2023-24**



*Lions bridge the gap between need and help*